பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 01 திங்கட்கிழமை 16.12.2024 | அதிர்வு 137

## ரணில் மீண்டும் டில்லி பயணம்!



ஐக்கியதேசியக்கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க எதிர்வரும் 22 ஆம் திகதி 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுர – மோடி நேரில் சந்திப்பு



## இலங்கை – இந்திய உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு

(இந்தியாவிலிருந்து எம்.கே. ஷாகுல் ஹமீது)

**இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி மாளிகையில் இன்று சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகையில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் வரவேற்றனர். இதன்போது இரு நாட்டு முக்கிய பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தப் பட்டது.**

02





## இந்தியாவின் பாதுகாப்பைப் பாதிக்கும் வகையில் இலங்கையைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம்

### மோடியிடம் அநுர உறுதி

(இந்தியாவிலிருந்து எம்.கே. ஷாகுல் ஹமீது)

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக் கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகை யில் இலங்கை மண்ணைப் பயன் படுத்த ஒருபோதும் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



### யாழ். போதனாவுக்குள் அத்துமீறி நுழைந்த வழக்கில்

# அர்ச்சுனாவும் கௌசல்யாவும் பிணையில் செல்ல அனுமதி!

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பான வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் சட்டத்தரணி என். கௌசல்யா ஆகியோரைத் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி கௌசல்யா ஆகியோர் அத்துமீறி நுழைந்து வைத்தியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

அந்த வழக்கு இன்று திங்கட்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் சாட்டப்பட்ட வைத்தியர் மற்றும் சட்டத்தரணி ஆகிய இருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, வைத்தியசாலைக்குள் பணிப்பாளரின் அனுமதி இன்றி அத்துமீறி நுழைதல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது எனச் சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்திய நீதிவான், சந்தேகநபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

குறித்த வழக்கை மேற்கொண்டு நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்திய நீதிவான், வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நீதி அமைச்சர் சி.ஐ.டியில் முறைப்பாடு



நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, தனது கல்வித் தகைமை தொடர்பில் பிழையான தரவுகள் நாடாளுமன்றத் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர்,

"நான் ஒரு சட்டத்தரணி. 25 வருடங்கள் அத்துறையில் இருக்கின்றேன். எனவே, எனது பெயருக்கு முன்னால் நான் ஒருபோதும் கலாநிதிப் பட்டத்தைப் பயன்படுத்தியது கிடையாது.

எனது பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத் தகவல் திணைக்களம் மன்னிப்பு கோரியுள்ளது.

எனினும், எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் தவறான தகவல் உள்ளடக்கப்பட்டதா என்பது பற்றி விசாரிக்குமாறு கோரியே முறைப்பாடு செய்துள்ளேன்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அநுர - மோடி...**

இலங்கையின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பிறகு, முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் செய்த அநுரகுமாரவை நேற்று மாலை மத்திய இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் அரச அதிகாரிகள் வரவேற்றனர். அதன் பிறகு, மத்திய அமைச்சர்ளான நிர்மலா சீதாராமன், எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் இலங்கை ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு ஜனாதிபதி மாளிகையில் இன்று சிவப்பு கம்பளம் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதையடுத்து, ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்தார். அப்போது, இருவரும் பேச்சு நிகழ்த்தினர்.

இதில் குறிப்பாக இந்தியா – இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

மேலும், மீனவர்கள் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்தினர்.



# புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்னவை களமிறக்குகின்றது அரசு

## நாளை இரகசிய வாக்கெடுப்பு

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தில் சபாநாயகராக நியமிக்கப்பட்டிருந்த அசோக ரன்வல பதவி விலகியுள்ள நிலையில், புதிய சபாநாயகராகத் தமது கட்சியின் பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்னவை நியமிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொலனறுவை மாவட்டத்தில் விருப்பு வாக்குப் பட்டியலில் இவர் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். 51 ஆயிரத்து 391 விருப்பு வாக்குகளை இவர் பெற்றிருந்தார்.

புதிய சபாநாயகர் தெரிவு நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறவுள்ளது.



# சஜித் அணியின் சபாநாயகர் வேட்பாளராக ரோஹினீ?

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்குத் தமது கட்சியில் இருந்தும் வேட்பாளர் ஒருவரை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழியவுள்ளது.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சபாநாயகர் வேட்பாளராக ரோஹினீ குமாரி விஜேரத்னவின் பெயர் முன்மொழியப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

# யாழ்ப்பாணத்தில் பஸ் மோதி தந்தை மரணம்; மகன் காயம்

யாழ்ப்பாணத்தில் இரவு நேரம் வீதியோரமாக இருந்த வயோதிபரை பஸ் மோதியதில் அந்த நபர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மகன் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஆதார சேர்க்கப்பட்டுள்ளார்.

பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த மோஷஸ் பாக்கியநாதன் (வயது 76) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

பெரியவிளான் பற்றிமா தேவாலயத்துக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் உயிரிழந்தவரும், அவரது மகனும் வீதியோரமாக இருந்துள்ளனர்.

அவ்வேளை வீதியில் பயணித்த பஸ் இருவரையும் மோதியுள்ளது. அதில் காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், தந்தை உயிரிழந்துள்ளார். மகன் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தையடுத்து பஸ் சாரதி பஸ்ஸை விபத்து நடைபெற்ற இடத்தில் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்




**இந்தியாவின்...**

இடமளிக்கப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு இன்று பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடை பெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டை வரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இலங்கை – இந்தியத் தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது என்பதைத் தாம் நன்கு அறிவதாகக் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார நினைவுகூர்ந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்துக்காக இந்தியாவைத் தெரிவு செய்தமை தொடர்பில் தாம் மகிழ்ச்சி யடைவதாக இந்தியபி பிரதமர் நரேந்திர மோடி இதன்போது தெரிவித்தார்.

எதிர்கால நோக்குடன் இரு நாடு களுக்கும் இடையிலான தொடர்புகளை புதிய கோணத்தில் கொண்டு செல்லும் வகையில் பௌதீக, டிஜிட்டல் மற்றும் எரிசக்தி ஆகிய பிரதான தூண்களைப் பலப்படுத்துவதற்காக இலங்கைக்குத் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதும், இரு நாடுகளுக்கும் இடையே மின்சார வலையமைப்பு இணைப்பு மற்றும் பெற்றோலியக் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது என்பன குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத் தப்பட்டது.

இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பைத் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் ரயில் பாதை சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற் றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தியக் கல்வி ஒத்துழைப்பின் கீழ் அடுத்த வருடம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 200 மாண–வர்களுக்கு மாதாந்தப் புலமைப்பரிசில் கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஐந்து வருடங்களில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க இந்தியப் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார்.

அத்தோடு வீடமைப்பு, புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்பு, இலங்கையில் விவசாயத்துறை, பால் உற்பத்தித்துறை மற்றும் கடற்றொழில் துறை முன்னேற்றம் என்பவற்றுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இந்தியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தி யத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணைப் பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க இதன்போது தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் கீழ் கடல் சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு , இணையப் பாதுகாப்பு, கடத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு எதிரா கப் போராடுதல், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மத்திய போசன விருந்து வழங்கினார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க அழைப்பு விடுத்தார்.

---

**ரணில் மீண்டும்...**

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள வுள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஒரு வாரகாலம் இந்தியாவில் தங்கி யிருந்து முக்கியத்துவமிக்க சந்திப்பு களில் அவர் ஈடுபடவுள்ளார் எனவும் அறிய முடிகின்றது. கடந்த நவம்பர் 21 ஆம் திகதியும் ரணில் டில்லிக்குச் சென்றி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மோ. சைக்கிள் - பஸ் மோதி விபத்து உயர்தர மாணவி பரிதாப உயிரிழப்பு

கண்டி, வில்லியம் கோபல்லவ மாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உயர்தர மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று தனியார் பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் பயணித்த உயர்தர மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கண்டி, கெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய உயர்தர மாணவியே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற உயர்தர மாணவியின் தந்தைக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் பின்வருமாறு:-

1. பதுளை மாவட்டம் – ஹப்புத்தளை, ஹாலிஎல, பசறை ,எல்ல

2. கண்டி மாவட்டம் – மெததும்பர, பாததும்பர

3. குருணாகல் மாவட்டம் – ரிதிகம

4. மாத்தளை மாவட்டம் – இரத்தோட்டை, அம்பன்கங்கை கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ராஜ்ஜியமே இல்லாத ராஜா...!

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில், தனது தலைமைப் பதவியை மேலும் ஆறு வருடங்களுக்குச் சத்தம் சந்தடியின்றி வளைத்துப் போட்டுக் கொண்டுள்ளார் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அந்தச் செய்தியைப் பார்க்கும் போது 'ராஜா என்பார் மந்திரி என்பார்...ராஜ்ஜியம் இல்லை ஆள...' - என்ற 'புவனா ஒரு கேள்விக்குறி' எனும் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திய படத்தில் வரும் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் - மூன்றரை மாதங்களுக்கு முன்னர் -

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கட்சி மாநாட்டின் போது இந்தத் தீர்மானம் - மேலும் ஆறு ஆண்டுகளுக்கு ரணிலின் தலைமைப் பதவியை உறுதிப்படுத்தும் முடிவு - முறைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சி உறுப்பினர்களுக்கோ பொதுமக்களுக்கோ முன்னறிவிப்பு இல்லாமல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தலைமைப் பதவியில் ஆறு ஆண்டுகள் நீடிப்பு அளிக்கும் வகையில் ஒரு ஷரத்து அந்த மாநாட்டில் வைத்து கட்சியின் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மேலும், புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட யாப்பின்படி, கட்சிக்குள் தற்போது உள்ள அனைத்துப் பதவிகளும் இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் காலியாகிவிடும். இந்த வெற்றிடங்களுக்கு தனி நபர்களை நியமிக்கும் அதிகாரமும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த யாப்புத் திருத்தப்படி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி எழுபத்தியைந்து ஆண்டுகளுக்கு முந்திய பழமையான கட்சி. இலங்கை அரசியலில் மிக மூத்த கட்சி. சுதந்திர இலங்கையை மாறி மாறி ஆண்டு வந்த பிரதான கட்சிகளில் ஒன்றாக அது இருந்தது.

ஆனால் இன்று அதன் நிலைமை 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கட்டத்துக்கு' வந்து விட்டது.

கடந்த முப்பது ஆண்டுகளாக அதன் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நீடிக்கின்றார். பெரும் பின்னடைவுகளையும் படுதோல்விகளையும் அந்தக் அந்தக் கட்சி சந்தித்து, ஒரேயடியாகத் துவண்ட பின்னரும் கட்சியின் தலைமைப் பதவியை விட்டு விலகுவதயில்லை என்று பிடிவாதம் பிடித்து, பலவந்தமாக அதைத் தக்க வைத்து, அதில் நீடித்துக் கொண்டிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

இந்த முப்பது ஆண்டுகளில் அந்தக் கட்சி ஒரு சில வருடங்களை தவிர, மற்றக் காலங்களில் எல்லாம் எதிரணியிலேயே அமருகின்ற துரதிஷ்டம் ரணிலின் தலைமையின் கீழ் தொடருகின்றது இப்போது நாடாளுமன்றத்தில் பத்தோடு பதினோராவது கட்சியாக வரும் நிலைமை அதற்கு ஏற்பட்டிருக்கின்றது. கடந்த இரண்டு நாடாளுமன்றங்களிலும் தலா ஒவ்வொரு ஆசனமே அதற்கு கிடைத்திருக்கிறது.

மற்றைய கட்சிகளின் மோசமான பின்னடைவுக்கு மத்தியிலும் கூட ஐக்கிய தேசியக் கட்சியினால் மீண்டெழ முடியவில்லை.

அரசியல் ரீதியான படுதோல்விகளின் பின்னரும் கூட, அவற்றுக்குப் பொறுப்பேற்றுப் பதவியை ராஜினாமாச் செய்யாமல், தலைமை பதவியைப் பிடித்து வைத்திருக்கும் ரணிலின் போக்குக் காரணமாகக் கட்சியில் இருந்து பலரும் வெளியேறிவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சஜித் பிரேமதாஸ தலைமையில் வெளியேறிய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் தொடர்ந்து இரண்டாவது தடவையாகவுன் பிரதான எதிர்க்கட்சியாகவேனும் உயர்ந்திருக்கின்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ ரணிலின் தலைமைப் பதவிப் பேராசை காரணமாக உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகச் சுருங்கி வருகின்றது.

மக்கள் செல்வாக்கையும், ஆதரவையும், வசீகரத்தையும் இழந்துவிட்ட ரணில் விக்கிரமசிங்க தமது பதவி ஆசை காரணமாக கட்சியை நிரந்தர மூடு விழாவை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றார் என்பதுதான் உண்மை. அவரோடு அவரது கட்சியும் சேர்ந்து அரசியல் ரீதியாக அழிவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றே தோன்றுகின்றது.

ராஜ்ஜியமே இல்லாத நாட்டுக்கு ராஜா மாதிரி, வெறும் 'லெட்டர் பாட்' கட்சியாக மாறியிருக்கும் - அல்லது தமது பதவியாசைப் போக்கால் தாம் அப்படி மாற்றியிருக்கும் - ஒரு கட்சிக்குத் தலைவராக ரணில் நீடிக்கின்றார். அவ்வளவே...!



### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனைக்கு

# பெட்டா பள்ளிவாசல் சம்மேளனம் 42 லட்சம் ரூபா நிதியை வழங்கியது

(திராய்க்கேணி தினகரன் நிருபர் நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் 85 பேருக்கு கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தால் சுமார் 42 லட்சம் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மற்றும் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் வழி காட்டலில் கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தால் சேகரிக்கப்பட்ட நிதித் தொகையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் ஒருங்கிணைப்பிலும் அதன் தலைவர் யூ.எல்.நியாஸி தலைமையிலும் அட்டாளைச் சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எல்.எம்.லமீர் ஹாபீழ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல். ஹனீஸ், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச் சேனைக் கிளையின் செயலாளர் நஸீர், கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் அல் –ஹாஜ்



ஏ.எச்.எம்.நஸார், பொருளாளர் அல்–ஹாஜ் எம்.எஸ்.எம்.இஸாம் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா வீதம் பணத்மை நிகழ்வில் கலந்து கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.







# கனமழையால் வவுனியா வடக்கில் பப்பாசி செய்கைகள் பெரும் பாதிப்பு!

## நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளது பப்பாசிப் பயிற்செய்கைகள் கனமழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக, பாதிக்கப்பட்ட சில பப்பாசித் தோட்டங்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய தரப்பினர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, 500 விவசாயிகளுக்கு, பசுமை அக்ரோ தனியார் நிறுவனத்தால் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் ஊடாக ஒரு விவசாயிக்கு அரை ஏக்கர் வீதம், மொத்தம் 250 ஏக்கரில் பப்பாசி, மிளாகாய் பயிற்செய்கை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விவசாயிகளின் பாரிய நிதிச்செலவில் செய்கைபண்ணப்பட்ட பப்பாசிப் பயிற் செய்கைகள் அண்மையில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

பப்பாசி அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டதற்கு அமைவாக அவர், நயினாமடு, மதியாமடு, சன்னாசி பரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிப்பாசிப் பயிற்செய்கைகளைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்தோடு நயினாமடுப் பகுதியில் அமைந்துள்ள பசுமை அக்ரோ நிறுவன அலுவலகத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கும் கலந்துரையாடல் நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவரங்களைக் கேட்டறிந்தார். உரிய தரப்பினருடன் பேசி பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்கு உரிய நஷ்ட ஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.





EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME




everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# செட்டிக்குளம் அறநெறிப் பாடசாலைக்கு சீருடை வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மெனிக்பாம் ஞானப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் உள்ள 67 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 500 ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.

இதில் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் சிவகஜன், வெங்கல செட்டிகுளம் பிரதேச உத்தியோகத்தர் சுஜேந்திரன், கிராம அமைப்புக்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.












# அட்டாளைச்சேனையில் சிங்கள பாடநெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(நவாஸ்)

100 மணித்தியாலங்கள் சிங்கள பாடநெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் து.ஜெகராஜன் பிரதம அதியாகவும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் , நிர்வாக உத்தியோகத்தர் கே.பி. சலீம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எல். எம். ஹமீட், மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தர் அபூவக்கர் மனூஸ், பாட போதனாசிரியர் எம்.எம். பாஸில், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் து.பரமநிதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.முஹம்மட் நிஸான் போன்றோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மேலதிக அரச அதிபருக்கு பிரதேச செயலாளர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.





# கொக்கிளாயில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை!

(பா.சதீசன்)

கொக்கிளாய் கர்நாட்டு கேணிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

கண்டி, நுவரெலியா பகுதியில் இருந்து தொழில் நிமித்தம் வந்த இருவர் முல்லைத்தீவு கொக்குளாய் கர் நாட்டுகேணிப் பகுதில் வாடியில் தங் கியிருந்துள்ளார்கள்.

இருவரும் போதைக்கு அடிமையாகி இருந்த நிலையில் நேற்று மாலை வாய்த்தகராறு ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறிய நிலையில் இரவு நுவரெலியா பிரதேசத்தில் வசிக்கும் குடும்பஸ்தர் கண்டியில் வசிக்கும் மற் றைய நபரை அடித்து கொலை செய் துள்ளார்.

பின்னர் இந்த விடயம் தொடர்பாக கொக்குளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலி



ஸார் மரணமடைந்த நபரை வைத் தியசாலையில் பிரேத பரிசோ தனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

சம்பவத்தில் சுந்தரராஜ் (வயது 38) என்ற கண்டியைச் சேர்ந்த நபரே கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவத் துடன் தொடர்புடைய நுவரெலியா மஸ்கெலிய பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய மற்றைய நபர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.





# யாழ்பல்கலை கிளி. வளாகத்தில் 'பசுமை புரட்சி' மரம் நடுகை திட்டம்

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ்)



யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமையப் பெற்றுள்ள பள்ளிவாசல் எல்லைக்கு உட்பட்ட பகுதியினுள் சிரமதான நிகழ்வும் மரம் நடும் நிகழ்வும் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொழில்நுட்ப பீட மாணவர்கள், விவசாய பீட மாணவர்கள், பொறியியல் பீட மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர்.

இதன்போது சுமார் 35 இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்த ஜனாதிபதி உதவுதல் வேண்டும்!

## கிழக்கு பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கோரிக்கை

(ஹஸ்பர்)



இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, ஏற்றுக் கொண்ட சீடோ சமவாயத்தின் அடிப்படையில் புதிய சட்டமூலத்தை கொண்டுவருவதன் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் பாரபட்சங்களையும் நிறுத்த உடனடியாக உதவுங்கள் என்று கிழக்கு மாகாண பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் சனிக்கிழமை (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது இந்த அமைப்பினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறுகையில்,

இலங்கையின் அனைத்துப் பெண்களும் இன, மத, சமூக வேறுபாடுகளைக் கடந்து ஆணாதிக்க அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆணாதிக்க மயப்பட்ட குடும்ப, சமூக, வேலைத்தள, அரச அடக்குமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் அனைவருமே உள்ளாகின்றனர்.

இணையவழிக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் இம்சைகள், வன்முறைகளால் சிறுமிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனினும் காத்திரமான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் தவறு செய்பவர்கள் தப்பித்துக் கொள்கின்ற நிலைதான் தற்போதும் இருக்கின்றது.

இருந்த போதும், கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் வரையான காலப் பகுதியில் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 41 வயதான நபருக்கு 30 வருட கடூழிய சிறை தண்டனை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் கடந்த 11 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியதை எமது கிழக்கு மாகாண பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு வரவேற்கிறது.

இலங்கையில் இடம்பெறும் பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கான சட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். சட்டங்களில் சீர்திருத்தங்களை உடன் மேற்கொண்டு உதவுங்கள்.

அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாராபட்சங்களையும் இல்லாது ஒழிக்கும் (சீடோ) சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாக இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக புதியதொரு சட்ட மூலத்தை உருவாக்குங்கள். இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு இடம்பெறும் விசாரணைகளை உடன் நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குங்கள். அரசுக்கு எதிரான குற்றச் செயல்களை கையாள்வதற்கு போதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடை சட்டத்துக்குப் பதிலாக புதிய பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.- என்றனர்.




# அனைத்துப் பல்கலைக்கழக மேசைப்பந்துச் சுற்று; மொரட்டுவ, ஜெயவர்த்தனபுர அணிகள் சம்பியன்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொன்விழா நிகழ்வுகளின் வரிசையில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளன அங்கீகாரத்துடன் இடம்பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக் கழகங்களதும் ஆண், பெண் அணிகளுக்கு இடையில் போட்டிகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர், எஸ். மதிவாணன் மற்றும் பொது வைத்திய நிபுணி அனோஜா மதிவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,




இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளனத் தலைவரும், இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்னாண்டோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில், மொரட்டுவப் பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீஜெயவர்த்தனபுர, களனியப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.

பெண்கள் பிரிவில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது. மொரட்டுவ, கொழும்புப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.
















# அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பழைமை வாய்ந்த பாலம் சேதம்!

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கடந்த 46 வருட கால பழைமை வாய்ந்த பாலமொன்று சேதமடைந்துள்ளது என்று பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தினையும் றஹ்மானியாபாத் பிரதேசத்தினையும் இணைக்கும் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள பிரதான பாலமே இவ்வாறு சேதடைந்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது இப்பாலம் சேதமடைந்திருந்திருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக இப்பாலம் உடைப்பெடுத்து வருவதோடு, சில பகுதிகள் கீழிறங்கி வருவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இதனால் பயணிக்கும் வேளையில் அச்ச நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இப்பாலத்தின் மூலமாக பயணம் செய்து வருகின்றனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச மக்கள் இப்பாலத்தினை அதிகம் பயன்படுத்தி வருவதோடு, இப்பாலத்தின் மூலமாக ஒலுவில், திராய்க்கேணி, பாலமுனை போன்ற பிரதேசங்களுக்கு செல்வதற்காக இப்பிரதேச மக்கள் இப்பாலத்தினை பயன்படுத்தி வருகின்றனர்.

சேதமடைந்து வரும் இந்தப் பாலத்தின் நிலைமையைப் பார்வையிட்டு இதனை செப்பனிடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு துறைசார் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த 1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி முன்னாள் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.ஜலால்டீனின் அழைப்பின் பேரில் பிரதமர் ஆர்.பிரேமதாசவால் இந்தப் பாலம் திறந்து வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய மன்னார் ஆயருக்கு விரைவில் திருப்பொழிவு!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் தெரிவை தொடர்ந்து இவர் மூன்று மாதங்களுக்குள் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட வேண்டிய நியதி இருப்பதால் தபசு காலத்துக்கு முன் புதிய ஆயர் திருப்பொழிவு செய்யப்படுவார் என ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்துக்குப் புதிய ஆயர் தெரிவு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை சனிக்கிழமை (14) ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

இன்று 14 ஆம் திகதி உரோமாபுரியிலிருந்து திருத்தந்தையிடமிருந்து கடிதம் கிடைத்தது.

அதில் உரோமாபுரியில் இன்றைய தினம் (14) மதியம் 12 மணிக்கு எமது திருத்தந்தை மன்னார் மறை மாவட்டத்துக்குப் புதிய ஆயரை நியமனம் செய்வார் என்று கூறப்பட்டது.

இதன்படி எமது இலங்கை நாட்டின் நேரப்படி சரியாக மாலை 4.30 மணிக்கு திருத்தந்தை அவர்களால் எமக்கு அனுப்பப்பட்ட மடலை வாசித்தேன்.

திருத்தந்தையின் இலங்கை பிரதிநிதி அதிமேதகு பேராயர் பிரைன் குட்வாகே ஆண்டகை, எனக்கு அனுப்பிய செய்தியின் படியே திருத்தந்தை எமக்கு அனுப்பப்பட்ட மடல் குறிப்பிட்ட இத்தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மன்னார் மறைமாவட்ட பேராலயத்தில் யாவருக்கும் வாசித்து காட்டப்பட்டது.

ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அடிகளாரை புதிய ஆயராக மன்னார் மறைமாவட்டத்துக்கு நியமித்துள்ளார்.


வழமையாக திருச்சபையின் சட்டத்தின்படி புதிய ஆயரின் நியமனம் வெளிப்படுத்தப்பட்ட பின் மூன்று மாதங்களுக்குள் அவர் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டு மறைமாவட்டத்தை பொறுப்பேற்க வேண்டும்.

ஆகவே ஆயரும் அவரின் ஆலோசகர்களும் இதற்கான ஒழுங்கு முறைகளைச் செய்வார்கள்.

மூன்று மாதங்கள் என்கிறபோது பெப்ரவரி 14 ஆம் திகதிக்கு முன்பு இவருக்கு ஆயருக்கான அருட் பொழிவு வழங்கப்பட வேண்டும்.

விபூதி தினத்துடன் தவசு காலம் தொடங்குகின்ற படியால் இதற்கு முன்பே இவரின் ஆயருக்கான திருப் பொழிவை வழங்க கடமைப்பட்டுள் ளோம்.

ஆகவே இது தொடர்பாக நாங்கள் ஒன்றுகூடி இதற்கான ஆய்த்தங்களை முன்னெடுக்க இருக்கின்றோம்.- என்றார்.



# முதல்முறையாக அமைச்சரவை விரிவாக்கம்: மகாராஷ்டிராவில் 39 அமைச்சர்கள் பதவியேற்பு

மகாராஷ்டிர அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. நாக்பூரில் நடைபெற்ற விழாவில் ஆளும் பா.ஜ.க, சிவசேனா, தேசியவாத காங்கிரஸை சேர்ந்த 39 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க, ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா, அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் அடங்கிய மகாயுதி கூட்டணி அமோக வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 288 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணிக்கு 230 இடங்கள் கிடைத்தன. பா.ஜ.க. மட்டும் 132 இடங்களில் வெற்றி பெற்றது.

மகாராஷ்டிராவின் புதிய முதல்வராக பா.ஜ.க. மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிஸ் கடந்த 5 ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் ஆகியோர் துணை முதல்வர்களாக பதவியேற்றனர்.

இந்நிலையில், மகாராஷ்டிர அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. நாக்பூரில் நடைபெற்ற விழாவில், பா.ஜ.க, சிவசேனா, தேசியவாத காங்கிரஸை சேர்ந்த 39 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் பதவி பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். விழாவில் முதல்வர் பட்னாவிஸ், துணை முதல்வர்கள் ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பா.ஜ.க. மாநில தலைவர் சந்திரசேகர் பவன்குலே, மூத்த தலைவர்கள் ராதா கிருஷ்ண விகே பாட்டீல், சந்திரகாந்த் பாட்டீல் உட்பட பாஜகவை சேர்ந்த 19 பேர் புதிய அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா கட்சி மூத்த தலைவர்கள் குலாப்ராவ் பாட்டீல், தாதா பூஸ் உட்பட 11 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஹசன் முஷ்ரிப், தனஞ்செய் முண்டே உட்பட 9 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

மகாராஷ்டிர எம்.எல்.ஏக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் 43 பேர் அமைச்சர்களாக பதவியேற்க முடியும். கடந்த 5 ஆம் திகதி முதல்வராக தேவேந்திர பட்னாவிஸும், துணை முதல்வர்களாக ஏக்நாத் ஷிண்டேவும், அஜித் பவாரும் பதவியேற்றுக் கொண்டனர். தற்போது 39 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக மகாராஷ்டிர அமைச்சரவையில் 42 பேர் இடம்பெற்றுள்ளனர்.

புதிய அமைச்சர்களில் 33 பேருக்கு கேபினட் அந்தஸ்தும், 6 பேருக்கு இணை அமைச்சர் அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் ஒரு முஸ்லிம், 4 பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

துணை முதல்வர்கள், புதிய அமைச்சர்களுக்கான இலாகாக்கள் பின்னர் அறிவிக்கப்படும். மாநில உள்துறை, முதல்வர் பட்னாவிஸிடம் இருக்கும். இந்த துறை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்படாது. ஷிண்டேவின் சிவசேனா அணிக்கு ஊரக வளர்ச்சி, வீட்டு வசதி, தொழில், சுகாதாரம், போக்குவரத்து, தொழில்நுட்பம், சுற்றுலா, மராத்தி மொழி வளர்ச்சி ஆகிய துறைகள் ஒதுக்கப்படும். அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸுக்கு நிதி, கூட்டுறவு, விளையாட்டு உள்ளிட்ட துறைகள் ஒதுக்கப்படும் என்று மகாராஷ்டிர பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவித்தன

பா.ஜ.க. மாநில தலைவர் சந்திரசேகர் பவன்குலே கேபினட் அமைச்சராக பதவியேற்றுள்ளதால், புதிய பா.ஜ.க. தலைவராக ரவீந்திர சவாண் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

# இந்திய தபேலா இசை மேதை சாகிர் ஹுசைன் காலமானார்



பிரபல தபேலா இசை மேதை சாகிர் ஹுசைன் தனது 73 ஆவது வயதில் நேற்று காலமானார்.

அமெரிக்காவிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், காலமானார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதயக் கோளாறு காரணமாக அவர் மரணித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரபல தபேலா இசைக்கலைஞரான இவர் பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷண் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

அத்துடன், இந்திய அரசின் சங்கீத நாடக அகாடமி விருதும் சாகிர் உசேனுக்கு வழங்கப்பட்டுள்ளது.



# 24 மணித்தியாலங்களில் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 69 பேர் பலி

கடந்த 24 மணித்தியாலங்களில் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 69 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தஞ்சமடைந்துள்ள பாடசாலைகளைக் குறிவைத்தே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் சிறுவர்கள் ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரும் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# பிரான்ஸில் புயல் காரணமாக 100 இற்கும் மேற்பட்டோர் பலி!

பிரான்ஸின் மயோட்டே பகுதியில் ஏற்பட்ட புயல் காரணமாக நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மயோட்டே பகுதியில் கடந்த சில நாள்களாகச் சீரற்ற காலநிலை நிலவுகின்றது.

இந்த பகுதியில் தற்போது, மீட்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் சீரற்ற காலநிலையால் மீட்புப் பணிகளைத் தொடர முடியாததுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த புயல் மணித்தியாலத்துக்கு 225 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியுள்ளது.

இதனையடுத்து, மயோட்டின், பல பகுதிகளில் வசிக்கும் மக்கள் உணவு, நீர் மற்றும் தங்குமிடங்களுக்காகப் போராடி வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.









கனடா

# முரசு


பக்கங்கள் 03

திங்கட்கிழமை 16/12/2024


### 6 மணித்தியாலங்கள் சிகிச்சைக்காக காத்திருந்த நோயாளி உயிரிழப்பு

கனடாவின் மன்றியால் பகுதியில் சிகிச்சைக்காக காத்திருந்த நோயாளி மரணித்துள்ளார்.

சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக சுமார் 6 மணித்


02





# கனடாவில் வெறுப்பு காரணமாக 3 இந்திய மாணவர்கள் கொலை

**கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வெறுப்பு குற்றம் காரணமாக இந்த சம்பவங்கள் நடைபெறுவதால், இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.**

**காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு கனடா ஆதரவு தெரிவித்து, இந்தியா மீது குற்றம் சுமத்தியதால் இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.**

இந்நிலையில் கனடா நாட்டு மக்கள் அல்லது காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு விசாக்கள் வழங்குவதை இந்தியா மறுக்கிறது என கனடா ஊடகத்தில் செய்தி வெளியாகின. இதன் காரணமாக ஏற்பட்ட வெறுப்பில் கனடாவில் 3 இந்திய மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் குறிப்பிடுகையில்,

"கனடா ஊடகத்தில் வெளியாகும் செய்தி, இந்திய இறையாண்மை விடயத்தில் வெளிநாட்டு தலையீடு போன்றது. இந்தியா பற்றி அவதூறு தகவல்களை கனடா ஊடகங்கள் தெரிவிப்பதற்கு இது மற்றொரு உதாரணம். இந்திய விசா வழங்குவது நமது இறையாண்மையுடன் தொடர்புடைய செயல்பாடு. இந்திய ஒற்றுமையை குறைத்து மதிப்பிடுபவர்களுக்கு விசா மறுப்பது எங்களின் சட்டப்பூர்வ உரிமை.

கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டது கொடூரமான சோகம். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவியை, கனடாவின் டொரன்டோ மற்றும் வான்கூவர் நகரங்களில் உள்ள இந்திய துணை தூதரகங்கள் செய்கின்றன. இந்த கொலை விசாரணை குறித்து உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுடன், இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்பில் உள்ளனர். கனடாவில் வெறுப்பு குற்றங்கள் அதிகரித்துள்ளதால், அங்குள்ள இந்தியர்கள் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார்.

# கனடாவில் வாழ்வதற்குத் தகுதியான சிறந்த 10 நகரங்கள் பட்டியல் வெளியீடு

வீட்டு வசதி, சுகாதாரம், பாதுகாப்பு, சமூகம் மற்றும் சமூக சேவைகள் போன்ற முக்கிய அம்சங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2024-ஆம் ஆண்டில் கனடாவில் புதிதாக குடியேறுபவர்கள் வசிப்பதற்கு மிகவும் பொருத்தமான நகரங்களை அடையாளம் காணும் ஆய்வொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலம் முன்னிலை வகிக்கிறது. ஏனெனில் இந்த மாநிலத்திலுள்ள 6 இடங்கள் முன்னணி -10 பட்டியலில் உள்ளன.

அதிலும் குறிப்பாக விக்டோரியா, நோர்த் வன்கூவர், மற்றும் பென்டிக்டன் என முதல் மூன்று இடங்க


02






# ஒன்றாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

ஒன்றாறியோ மாகாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடக்கு ஒன்றாறியோவின் டெமிஷ்காமின் பகுதிகள் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் 65 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் ரொறன்டோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவத்தில் கால்மடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைப் பிடித்துள்ளன.

அதன் பிறகு வினிபெக் (மனிடோபா) மற்றும் சாஸ்காட்டூன் (சாஸ்காட்செவான்) நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பிடித்துள்ளன.

இந்த நகரங்கள் கனடாவில் குடியேறும் மக்களுக்கு பொருத்தமான வாழ்க்கை தரத்தை, சமுதாய ஆதரவை, மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன.

விலைமதிப்பு நிறைந்த வாழ்க்கை முறையுடன் புதிய வாழ்வை அமைக்க இந்நகரங்கள் சிறந்த வாய்ப்புகளை தருகின்றன. இதன் மூலம், கனடா, புதியவர்களுக்கு உலகின் சிறந்த நாடாகத் திகழ்கிறது.

2024 ஆம் ஆண்டில் கனடாவில் வசிப்பதற்கு மிகவும் பொருத்தமான 10 நகரங்கள் வருமாறு,

1. விக்டோரியா, 2. நோர்த் வன்கூவர், . பென்டிக்டன், வினிபெக், மனிடோபா 5. சாஸ்காட்டூன், சாஸ்காட்செவான் 6. ரெஜினா, சாஸ்காட்செவான் 7. வெஸ்ட் வன்கூவர், பிட்ட் மீடோஸ், வைட்ஹார்ஸ், யுகான் 10. கம்லூப்ஸ், ரொப்-20 பட்டியலில் பார்த்தாலும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் 10 நகரங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் வன்கூவர், டெல்டா போன்ற நகரங்களும் உள்ளன.

## 6 மணித்தியாலங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாலங்கள் காத்திருந்தவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார். 39 வயதான அடம் போர்கோயிங் என்ற நபர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபருக்கு இ.சி.ஜி. சோதனையை நடத்தப்பட்டதன் பின்னர் நீண்ட நேரம் சிகிச்சை அளிப்பதற்கு தாமதமாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நெஞ்சு வலி காரணமாக அவர் வைத்தியசாலையின் உதவியை நாடியுள்ளார். கனடாவில் இவ்வாறு சிகிச்சைக்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

சுமார் ஆறு மணித்தியாலங்கள் காத்திருந்து உரிய சிகிச்சை அளிக்கப்படாத நிலையில், அந்த நோயாளி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தங்களது விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# போதைப்பொருள் கடத்தல் ரொறன்டொவில் 4 பேர் கைது

கனடாவின் ரொறன்டோவில் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் நால்வருக்கு எதிராகவும் ஆயுத பயன்பாடு தொடர்பிலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகளும் மூன்று போலி துப்பாக்கிகளும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸார் 13 குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் 18 மற்றும் 19 வயதுடையவர்வர்கள் என்பது குறிப்பிடதக்கது.



# யாழில் வித்தியாசமான சைக்கிளில் சுற்றித்திரியும் கனடா தம்பதிகள்

கனடா நாட்டிலிருந்து சுற்றுலாவிற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தம்பதிகள் வித்தியாசமான சைக்கிளில் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி தம்பதிகள் வடமராட்சி - பருத்தித்துறை, மருதங்கேணி வீதியில் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

அத்தோடு, இந்த வித்தியாசமான சைக்கிள் இணைப்பை மக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.